# சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

**இடர்முகாமைத்துவக் கால சுயகற்றல் செயலட்டை – 2021**

**பாட இணைச் செயற்பாடு (தரம் - 04)**

காலம் : 2021.05.17 – 2021.05.23

தயாரிப்பு :C.ரூபி ஜசிந்தா (ஆசிரிய ஆலோசகர்)
தெஹியோவிற்ற வலயம்

## செயலட்டை இல : 03

- **உணவை உட்கொள்ளப் பயன்படுத்தும் பாத்திரங்களை கடதாசிக் கூழைப் பயன்படுத்திச் செய்யுங்கள்.**

1. பிளாத்திக் பீங்கானை எடுத்து அதனைத் தலை கீழாகப் புரட்டி வையுங்கள்.
2. கடதாசித் துண்டுகளைக் கிழித்து நீர் கொண்ட பாத்திரத்தில் இடுக.
3. சிறிதளவு மாப்பசையைத் தயார் செய்துக் கொள்க.
4. ஆரம்பத்தில் நீரில் நனையவிட்ட கடதாசித் துண்டுகளை கோப்பைகளில் மீது இடுக.(பசை பூசப்படாத ஈரலிப்பான கடதாசித் துண்டுகள்)
5. கோப்பையில் இடப்பட்ட கடதாசித் துண்டுகள் மீது பசையைப் பூசுக.
6. மீண்டும் ஈரலிப்பான கடதாசித் துண்டுகளை அதன் மீது இடுக.
7. இவ்வாறு தடிப்பான படையொன்று உருவாகும் வரை மீண்டும் மீண்டும் இக் கடதாசியை ஒட்டிக் கொள்க.
8. ஒட்டும் போது சுருக்கங்கள் ஏற்படாதவாறு கையால் நன்கு தடவிக் கொள்க.
9. இவ்வாறு தயாரிக்கப்பட்ட தட்டத்தை உலர்த்தி (ஒரு நாளின் பின்னர்) கழற்றிக் கொள்க.
10. நீங்கள் விரும்பியவாறு நிறங்கள், கோலங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அலங்கரித்துக் கொள்க.